அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS


# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2025

# தமிழ்

# ஆண்டு 12

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: 07.06.2025

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 20

சுட்டெண் :

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3 4

1. தமிழரது மரபுரிமைத் திங்களாக அடையாளப்படுத்தப்பட்டது
   1. சித்திரை
   2. கார்த்திகை
   3. தை
   4. மார்கழி

2. புறமுதுகு காட்டினால் அவர்களைத் தாக்குவதில்லை என்பது தமிழரது
   1. கொடைப்பண்பு
   2. போரறம்
   3. அகவாழ்வு
   4. வணிகக்கொள்கை

3. பெயராகவும் வினையாகவும் வராத சொல்
   1. படி
   2. அரும்பு
   3. அழை
   4. ஊர்

4. செருமுக நோக்கிச் செல்க! என்பது
   1. வியங்கோட்சொல்லியம்
   2. வியப்புச்சொல்லியம்
   3. கூற்றுச்சொல்லியம்
   4. தொடர்ச்சொல்லியம்

5. திருக்குறளை ஆழ்ந்து கற்று உலகறியப் பறைசாற்றிய இத்தாலி நாட்டவர்
   1. அல்பேட் சுவைட்சர்
   2. யி.யு. போப்
   3. வீரமாமுனிவர்
   4. இராபட் கால்டுவெல்

6. அழகு, மங்கை, துன்பம் ஆகிய பலபொருள் தரும் ஒரு சொல்
   1. பெண்
   2. துயர்
   3. வடிவு
   4. அணங்கு

7. நெடிதுயர்ந்த பனைமரத்தில் மெல்லமெல்லத் தன்னந்தனியாக ஏறினான்.
   இச்சொல்லியத்தில் அடுக்கிடுக்குத்தொடராக வருவது
   1. மெல்லமெல்ல
   2. நெடிதுயர்ந்த
   3. தன்னந்தனியாக
   4. அவன்

8. ஒரு செய்யுளின் முடிவு அடுத்த செய்யுளின் தொடக்கமாக வரத் தொடுப்பது
1. அந்தாதி
2. ஊசல்
3. எதுகை
4. கலம்பகம்

9. முதிர்ந்த மறக்குலப்பெண் என்பது
1. வீரப்பெண்டிர்
2. புதுமைப்பெண்
3. பேசாமடந்தை
4. மூதின் மகளிர்

10. "கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்." என்ற பழமொழி தரும் பொருள்
1. போட்டி வளர்ச்சியைத் தரும்.
2. பெருவாழ்வு சிறு தீமையால் கெடும்.
3. வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும்.
4. அளவோடு பழக வேண்டும்.

11. அவன் இனியன். இச்சொல்லியத்தில் இனியன் என்பது
1. தெரிநிலை வினை
2. குறிப்புவினை
3. ஏவல்வினை
4. எதிர்மறைவினை

12. உயிர்மெய் நெட்டெழுத்துகளின் எண்ணிக்கை
1. ஏழு
2. தொண்ணூறு
3. நூற்று இருபத்தாறு
4. இருநூற்றுப் பதினாறு

13. "மொழித்தளத்தில் தனித்தமிழ், அரசியல் தளத்தில் தனித்தமிழ்நாடு" என்ற கொள்கை உடையவர்
1. மகாகவி பாரதியார்
2. பாவலரேறு பெருஞ்சித்திரனார்
3. பரிதிமாற்கலைஞர்
4. மறைமலையடிகள்

14. அமைப்பு, உள்ளடக்கம், யாப்பு என்பவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுபவை
1. இசைக்கருவிகள்
2. பண்பாடுகள்
3. இலக்கணங்கள்
4. இலக்கியங்கள்

15. அவளோ நல்லவள். இதில் ஓகார இடைச்சொல் குறிக்கும் பொருள்
1. பிரிநிலை
2. முற்று
3. எதிர்மறை
4. சிறப்பு

16. பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி ஆகிய பகுசொல் உறுப்புகளைக் கொண்டது
   1. தின்றது
   2. படித்தாள்
   3. குதித்தனன்
   4. சொல்லிசை

17. தீந்தமிழ் என்பதன் சொற்புணர்ச்சி வடிவம்
   1. தீ + தமிழ்
   2. தீன் + தமிழ்
   3. தீந் + தமிழ்
   4. தீம் + தமிழ்

18. வாழும் நாட்டில் வாக்களிப்பதற்கான உரிமையைத் தருவது
   1. கல்வியுரிமை
   2. பேச்சுரிமை
   3. வதிவிட உரிமை
   4. குடியுரிமை

19. மெய் முன் மெய் புணர்தலுக்கு எடுத்துக்காட்டு
   1. பனையோலை
   2. செய்ந்நன்றி
   3. போரறம்
   4. காலுளைவு

20. செய்யுளுக்கு உரிமை பூண்டு வருவது
   1. இடைச்சொல்
   2. உரிச்சொல்
   3. பெயர்ச்சொல்
   4. வினைச்சொல்

21. 21ஆம் நூற்றாண்டு ஈழத்தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்புகளுள் பெரியதாகக் கருதப்படுவது
   1. கல்லோயாப் படுகொலை
   2. முள்ளிவாய்க்கால் பேரவலம்
   3. கறுப்பு யூலை
   4. யாழ்நூலக எரிப்பு

22. இடுகுறிச் சிறப்புப்பெயராக வருவது
   1. கடல்
   2. நாற்காலி
   3. வாழை
   4. மூக்குத்தி

23. கூத்தன் என்பதன் பெண்பாற்சொல்
   1. விறலி
   2. பாடகி
   3. பாடினி
   4. பாணனி

24. வினைத்தொகைக்கு எடுத்துக்காட்டு
   1. தாய்தந்தை
   2. பவளவாய்
   3. இன்பதுன்பம்
   4. சுடுநீர்

25. எனது விருப்பமான உணவுகள் பிட்டும் பொரியலும் ஆகும். இதில் தொழிலாகுபெயர்
   1. பிட்டு
   2. பொரியல்
   3. உணவுகள்
   4. விருப்பம்

26. தமிழுக்குப் புதுக்கவிதை அறிமுகமாகிய காலம்
   1. பத்தொன்பதாம் நூற்றாண்டு
   2. இருபத்தோராம் நூற்றாண்டு
   3. இருபதாம் நூற்றாண்டு
   4. ஒன்பதாம் நூற்றாண்டு

27. மென்றொடர்க் குற்றியலுகரமாக வருவது
   1. நண்டு
   2. நாகு
   3. காற்று
   4. விறகு

28. செயங்கொண்டாரால் இயற்றப்பட்ட சிற்றிலக்கியம்
   1. கலிங்கத்துப் பரணி
   2. மும்மணிக்கோவை
   3. கார்நாற்பது
   4. குற்றாலக்குறவஞ்சி

29. தோன்றாச் செயப்படுபொருள் இடம்பெறும் சொல்லியம்
   1. அவன் மளமள என்று உண்டான்.
   2. அழுத பிள்ளை சிரித்தது.
   3. கதிரவன் வானத்தில் தோன்றும்.
   4. ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார்.

30. தமிழிலக்கியங்களில் நிலமும் பொழுதும்
   1. உரிப்பொருள்
   2. முதற்பொருள்
   3. கருப்பொருள்
   4. ஒழுக்கங்கள்

1 2 3 4

30x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழர் நாட்டைக்காக்கும் போரிலே பெண்கள் எவ்வகையில் உறுதுணையாக நின்றுள்ளனர்?

___

___

2. ஈழத்தமிழர் உரிமைப் போராட்டத்தில் இந்தியாவின் தலையீட்டால் தமிழருக்கு ஏற்பட்ட விளைவுகளுள் ஒன்றை எழுதுக.

___

___

3. தமிழில் சிற்றிலக்கியங்களின் உருவாக்கத்துக்கான காரணங்கள் இரண்டு எழுதுக.

___

___

4. ஐரோப்பியர் வருகையால் தமிழிலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு எழுதுக.

___

___

5. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

துணைவினை: ___

பிறவினை: ___

6. மாறுபடு புணர்ச்சி வகைகள் இரண்டை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

___

___

7. ஆறாம்வேற்றுமைப் பொருள்களான தற்கிழமை, பிறிதின்கிழமைக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

தற்கிழமை: ___

பிறிதின்கிழமை: ___

5x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

1. "கனவு நனவாகும்" என்ற தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

2. படத்துக்கான கவிதையை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



3. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மாந்தரை நினைத்து விட்டால்
கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே - நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே - இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே!

- மகாகவி பாரதியார்

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

நாம் உண்ணும் உணவுகளை உடனுக்குடன் உண்ணக் கூடியவை, நீண்டகாலம் பாதுகாத்து வைத்திருந்து உண்ணக்கூடியவை என இரண்டாக வகைப்படுத்தலாம். இவ்வுணவுகளே மாந்தரது அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகவும் உடல் நலத்துக்கு அகத்தியமானதாகவும் விளங்குகின்றன. நாம் வாழும் சூழலிலுள்ள நுண்ணுயிர்களால் உணவுகள் கெட்டுப் பாழாகி விடுகின்றன. இவ்வாறு உணவுப் பொருள்கள் பழுதடையாமல் பாதுகாக்கும் முறையே உணவு பதனிடும் முறை ஆகும். உணவு பதனிடுவதற்குப் பல்வேறு முறைகள் பயன்பாட்டில் உள்ளன. பழப்பாகு செய்தல், காற்றுப் புகாதவாறு அடைத்தல், தேனில் ஊறவைத்தல், உப்பிட்டு வெயிலில் உலர்த்துதல், ஊறுகாய் போடுதல் போன்றன அவற்றுள் சிலவாகும். இதன் மூலம் பழங்கள், காய்கறிகள், இறைச்சி வகைகள், கடலுணவுகள் போன்றவற்றை நீண்ட நாள்கள் பயன்படுத்தும் வாய்ப்புக் கிடைக்கிறது. பண்டைய எகிப்திய, கிரேக்க நாகரிக மக்கள் உணவு பதனிடும் முறையை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்தனர். தமிழரது உணவு பதனிடும் முறைகளும் தொன்மையானதாகும். பதனிடப்பட்ட உணவுகளை ஏற்றுமதி செய்து வருமானத்தைப் பெறும் நாடுகளுள் சீனாவும் ஒன்று. அந்நாட்டின் பதனிடப்பட்ட உணவுப் பொருள்கள் உலகச் சந்தையிலே புகழ்பெற்று விளங்குகின்றன. இன்று பல்வேறு வேதிப் பொருள்களைப் பயன்படுத்தி உணவுகளைப் பதனிடுகிறார்கள். இதனால், உடல்நலம் கெடும் நிலையும் ஏற்பட்டுள்ளது. "உணவே மருந்து" என்ற எம்முன்னோரது அறிவுரை, உணவு மூலம் உடல் நலத்தைப் பேணுவதற்கு உதவும்.

10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஐக்கிய இராச்சியம் - கனடா:**

Among the ethnic groups around the world fighting for liberation, the Eelam Tamils are one of them. The liberation struggle of Tamils aimed to restore their lost rights and motherland and establish a separate state for Tamils. For this noble cause, the Eelam Tamil community has made immense sacrifices, even giving their lives. Today, instead of living as free people in our own independent state, they continue to endure oppression under foreign rule in their homeland or live as refugees in other countries. The responsibility of attaining justice for the genocide waged against the Tamil people in Eelam lies with the younger generation of the Tamil diaspora. We should use our multilingualism, political activism, technical knowledge, social networking sites, etc. as great means for our justice and continuously to expose the injustices done to us to the world. This effort will contribute to reclaiming our lost homeland and establishing an independent state for us.

**பிரான்சு:**

Parmi les communautés qui luttent pour leur libération dans le monde, la communauté tamoule d'Eelam en fait partie. Le combat de libération des Tamouls d'Eelam vise à reconquérir leurs droits perdus, leur patrie, et à établir un État souverain pour les Tamouls. Pour cet idéal noble, la communauté tamoule d'Eelam a fait d'immenses sacrifices et a offert des vies. Aujourd'hui, la communauté tamoule d'Eelam, qui aurait dû vivre en tant que peuple libre, mais continue de subsister sous un régime étranger dans sa patrie et vit en tant que réfugiée dans les pays où elle a émigré. La responsabilité d'obtenir justice pour le génocide commis contre le peuple tamoul sur l'île d'Eelam incombe désormais à la jeune génération tamoule émigrée vivant à l'étranger. Nous devons utiliser nos compétences multilingues, engagement politique, connaissances technologiques et nos réseaux sociaux comme outils pour obtenir justice et exposer continuellement à l'échelle mondiale des injustices qui nous ont été infligées. Cette action contribue pour récupérer notre patrie perdue et établir notre propre État souverain.

**நோர்வே:**

Blant folkegruppene i verden som kjemper for frigjøring, er også tamiler fra Eelam. Eelam-tamilenes frigjøringskamp har som mål å gjenvinne sine tapte rettigheter og sitt hjemland, og å etablere en egen stat for tamilene. For dette edle målet har Eelam-tamilene ofret mye, inkludert sine liv. I dag, når Eelam-tamilene skulle ha levd som et fritt folk, lever de fortsatt under fremmed styre i sitt eget hjemland og som flyktninger i utlandet. Ansvar for å oppnå rettferdighet for folkemordskrigen som ble ført mot tamilene i Eelam, ligger hos den unge tamilske diasporaen. Vi må bruke vår flerspråklige kompetanse, politiske engasjement, teknologiske kunnskap og sosiale medier som verktøy for å fortsette å fortelle verden om den uretten vi har blitt utsatt for. Denne innsatsen vil bidra til å gjenvinne vårt tapte hjemland og etablere en egen stat for oss.

**இத்தாலி:**

Il popolo Eelam Tamil è uno dei popoli al mondo che lotta per la liberazione. La lotta per la liberazione degli Eelam Tamil ha come obiettivo rivendicare i propri diritti e la loro patria, e ristabilire l'indipendenza del Tamileelam. Per questo nobile obiettivo il popolo Eelam Tamil ha fatto enormi sacrifici e ha anche dato numerose vite. Oggi, il popolo Eelam Tamil, che avrebbe dovuto vivere come un popolo libero, continua a vivere sotto il dominio straniero nel proprio paese e come rifugiati nei paesi in cui sono emigrati. La responsabilità di ottenere giustizia per il genocidio condotto contro il popolo tamil nell'isola dell'Eelam ricade sulle giovani generazioni Tamil che vivono all'estero. Dobbiamo utilizzare le nostre competenze linguistiche,

attività politiche, la conoscenza tecnologica e i social media come strumenti per ottenere la giustizia che ci spetta, e raccontare continuamente al mondo le ingiustizie che ci sono state fatte. Queste azioni contribuiscono a riottenere la nostra patria e ristabilire il nostro stato.

### நெதர்லாந்து:

De Eelam Tamils zijn een van de etnische groepen in de wereld die strijden voor vrijheid. Eelam Tamils strijden voor hun verloren rechten en moederland. Deze strijd heeft veel offers en levens gekost. De Eelam Tamils, die nu als bevrijde mensen hadden moeten leven, leven in hun thuis in ballingschap en als vluchtelingen. Door de oorlog uitgezaaide jonge Tamils hebben de verantwoordelijkheid om gerechtigheid te verkrijgen voor de gepleegde genocide. Wij moeten onze meertaligheid, politieke invloed, commerciële invloed gebruiken om bij sociale gelegenheden aandacht te vragen voor het onrecht wat ons is aangedaan. Dit is allemaal bedoeld om ons verloren moederland terug te winnen en een eigen staat te krijgen.

### டென்மார்க்:

Blandt de folkeslag, der kæmper for frihed i verden, er Eelam-tamilere et af dem. Deres frihedskamp handler om at genvinde de tabte rettigheder og deres hjemland samt at opnå en selvstændig stat for tamilerne. For dette ædle mål har Eelam-tamilere ofret meget - endda deres liv. I dag burde Eelam-tamilerne have levet som et frit folk, men i stedet lever de enten under fremmed styre i deres eget hjemland eller som flygtninge i andre lande. Ansvarligheden for at opnå retfærdighed for det folkemord, der blev begået mod tamilerne på øen Eelam, ligger nu hos den unge tamilsk-diaspora. Det er vores pligt at bruge vores sproglige evner, politiske engagement, teknologiske viden og sociale medier til at skabe opmærksomhed om den uretfærdighed, der blev begået mod os. Vi må fortsat informere verden om vores sag og kæmpe for retfærdighed. Denne indsats vil være afgørende for at generobre vores tabte hjemland og etablere en selvstændig stat for tamilerne.

### சுவீடன்:

Eelam-tamilerna är en av de etniska grupperna i världen som kämpar för frihet.
Eelam-tamilernas befrielsekamp syftade till att få tillbaka deras förlorade rättigheter och hemland samt skapa en egen stat för tamilerna. Eelam-tamiler har gjort stora uppoffringar och till och med gett sina liv för detta ädla syfte. Eelam-tamilerna, som skulle ha levt som självständiga idag, fortsätter att leva under främmande styre i sitt hemland och som flyktingar i andra länder. Ansvaret för att få rättvisa för folkmordskriget mot eelam-tamilerna ligger hos de tamilska ungdomarna som lever i diasporan. Vi måste använda vår flerspråkighet, politisk aktivism, tekniska kunskaper och sociala medier som verktyg för att uppnå rättvisa och kontinuerligt berätta för världen om de orättvisor som har begåtts mot oss. Detta kommer att hjälpa oss att återta vårt förlorade hemland och skapa vår egen stat.

### பின்லாந்து:

Eelamin tamilit ovat yksi niistä etnisistä ryhmistä, jotka taistelevat vapauden puolesta maailmassa.
Tamilien vapautustaistelun tavoitteena on palauttaa menetetyt oikeudet ja kotimaa sekä perustaa itsenäinen tamilivaltio. Tämän ylevän päämäärän vuoksi Eelamin tamiliyhteisö on tehnyt valtavia uhrauksia, jopa antanut henkensä. Tänä päivänä, sen sijaan että he eläisivät vapaina omassa itsenäisessä valtiossaan, he joutuvat edelleen kärsimään sorrosta vieraiden vallan alla kotimaassaan tai elämään pakolaisina muissa maissa. Vastuu oikeuden hakemisesta Eelamin tamileihin kohdistetusta kansanmurhasta on nyt tamilidiasporan nuoremman sukupolven harteilla. Meidän on hyödynnettävä monikielisyyttämme, poliittista aktivismiamme, teknistä osaamistamme ja sosiaalista mediaa keinona taistella oikeuksiemme puolesta ja tuoda maailmalle jatkuvasti esiin meille tehtyjä vääryyksiä. Tämä toiminta auttaa meitä palauttamaan menetetyn kotimaamme ja perustamaan oman itsenäisen valtiomme.

தமிழ்:

10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழர் வாழ்வியலில் அயலார் ஊடுருவல்
2. புலம்பெயர் இலக்கியங்கள்
3. நீங்கள் கலந்துகொண்ட கருத்தரங்கு

    உள்ளடக்கக் குறிப்புகள்:
    - கருத்தரங்கின் தலைப்பும் கருப்பொருளும்
    - கையாளப்பட்ட உத்தி முறைகள்
    - அதனால் அடைந்த பயன்கள்
4. அறிவியல் வளர்ச்சியின் அகத்தியமும் அச்சுறுத்தலும்

    உள்ளடக்கக் குறிப்புகள்:
    - இன்றைய அறிவியல் வளர்ச்சிகள்
    - அவற்றின் அகத்தியமும் பயனும்
    - அவற்றால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள்

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

**குழந்தை பிறந்தவுடன் அதற்குப் பெயர் வைப்பது உலகில் வாழும் எல்லா இனங்களும் பின்பற்றும் வழக்கமாகும். குழந்தை தனது பெயர் ஊடாகவே உலகுக்கு அறிமுகமாகிறது. அத்தோடு, அப்பெயர் குழந்தையை அடையாளப்படுத்துபவற்றுள் ஒன்றாகவும் விளங்குகிறது. பல நாடுகளில் அந்நாட்டின் மொழி, பண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையிலான மக்கட்பெயர்கள் அரசினால் வெளியிடப்படுகின்றன. அவற்றுள் ஒன்றையே அந்நாட்டு மக்கள் குழந்தைக்குச் சூட்டவேண்டும் என்பதும் சட்டமாக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடு தேவையற்றதாகவும் விரும்புகின்ற பெயரைச் சூட்டுவதற்கான வாய்ப்பைத் தடுப்பதாகவும் எண்ணுவோர் பலர். ஆனால், கால ஓட்டத்தில் ஓரினம் தான் யாரென்பதை உலகுக்கு அறிவிக்கும் அடையாளமாக இப்பெயரே நிலைபெறுகிறது. இதனாலேயே, தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்ப்பெயர்களைச் சூட்டவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. இதற்காகத் தமிழ்ப்பெயர்த் தொகுப்புநூல்கள் பலவும் வெளியிடப்பட்டிருக்கின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன் புலம்பெயர்ந்து தென்னாபிரிக்கா, மொறிசியசு, பிசி போன்ற நாடுகளில் வாழும் தமிழர், அந்நாடுகளில் மொழியிழந்த தமிழராக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால், இவர்களுடைய பெயர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பெயர்களாகவே இருக்கின்றன. தலைமுறைகள் பல கடந்தும் அவர்களைத் தமிழராக அடையாளப்படுத்தி நிற்பவற்றுள் அவர்களது பெயர்களும் அடங்குகின்றன. எனவே, புலம்பெயர் நாடுகளில் வாழும் நாமும் குழந்தைகளுக்குத் தமிழ்ப்பெயரைச் சூட்டவேண்டும் என்பதில் அக்கறையுடனும் விழிப்புணர்வுடனும் செயற்படுவோம்.**

1. குழந்தை எதனூடாக உலகுக்கு அறிமுகமாகிறது?

1 புள்ளி

______________________________

2. தமிழர் மொழியிழந்த தமிழராக வாழும் நாடுகள் எவை?

2 புள்ளிகள்

______________________________

3. பல நாடுகளில் அரசினால் எது சட்டமாக்கப்பட்டுள்ளது?

2 புள்ளிகள்

______________________________

4. தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்ப்பெயரைச் சூட்டவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றமைக்கான காரணம் யாது?

2 புள்ளிகள்

______________________________

5. உலகில் வாழும் எல்லா இனங்களும் பின்பற்றும் வழக்கம் யாது?

2 புள்ளிகள்

______________________________

9 புள்ளிகள்

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

# தலைப்புகள்:

- காப்புறுதி ஒப்பந்தம்
- மருத்துவக் காப்புறுதி
- காப்புறுதித் திட்டங்கள்
- மருத்துவத்துறை வளர்ச்சி

அ. ________________________________________

உலக நாடுகள் பலவற்றில் காப்புறுதித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மருத்துவக் காப்புறுதி, உந்துக் காப்புறுதி, வாழ்நாள் காப்புறுதி, உடைமைக் காப்புறுதி போன்றவை காப்புறுதிகளுள் சிலவாகும். இக்காப்புறுதி ஒப்பந்தங்கள் செய்வதனால் எதிர்பாராத வகையில் ஏற்படும் இழப்புகளுக்கான நட்டஈட்டுத் தொகையினை அந்நிறுவனங்கள் வழங்குகின்றன. அத்தோடு, இது முதலீடாக அமைவதாகவும் நம்பப்படுகிறது.

ஆ. ________________________________________

நாம் காப்புறுதி ஒப்பந்தங்களிலே கையொப்பமிடுவதற்கு முன்னர் அக்காப்புறுதி தொடர்பான அனைத்து உள்ளடக்கங்களையும் நன்கு வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், ஏதேனும் காரணங்களுக்காகக் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து இழப்புத்தொகையைப் பெறக்கூடிய வாய்ப்பை இழக்க நேரிடலாம். காப்புறுதி நிறுவனப் பணியாளர்களுள் பலர் தமக்கான வாடிக்கையாளர்களை உள்வாங்குவதிலேயே கூடுதல் கவனம் செலுத்துகிறார்கள் என்பதை மறவாதிருக்க வேண்டும்.

இ. ________________________________________

இன்று வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் மருத்துவக் காப்புறுதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது தரமான, நம்பகமான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வழிசெய்கிறது. நீண்டகால மருத்துவப் பராமரிப்பு, அறுவைச் சிகிச்சை போன்றவற்றை எந்தத் தயக்கமுமின்றிச் செய்வதற்கு நம்பிக்கை அளிக்கிறது. இந்நாடுகள் மருத்துவத்துறையில் மிகச்சிறந்த சேவையை வழங்குவதற்கும் இதுவே அடிப்படைக் காரணம் ஆகும்.

3 x2 = 6 புள்ளிகள்

குறிப்பு:

குறிப்பு:

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |